# DEPOSITION OF WITNESS

(See Rule 42)

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF Fast Track Court (At Magistrate Level )**

**PATTUKKOTTAI**

| | |
|---|---|
| **STC. No.** | **107/2025** |
| **பெயர்: PW-1** | **ரபேக்கா தனஜோதி** |
| **கணவர் பெயர் :** | **சலேத்ஞானராஜ் அந்தோனி** |
| **வயது:** | **52/2026** |
| **ஊர்:** | **க.எண்.174/1, காவல்காடு, அணைக்காடு கிராமம், பட்டுக்கோட்டை** |
| **தாலுக்கா** | **பட்டுக்கோட்டை** |
| **வேலை** | **ஆசிரியர்** |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th **day of July 2026**

**<u>ஆரம்பிக்கப்பட்ட நேரம் 11.19 AM</u>**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

**எதிரி ஆஜர்.**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலரான திருமதி. M.Usha (Assistant) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

1. நானும் என் கணவரும் எதிரி கொடுத்த புகார் சம்பந்தமாக பட்டுக்கோட்டை நகர காவல்நிலையத்திற்கு சென்றபோது, அங்கு என் கணவர் போலீஸிடம் எதிரியினுடைய இரண்டு காசோலைகள் இருக்கிறது என்று கூறினார். அந்த இரண்டு காசோலைகளும் SBI வங்கி காசோலைகள் என்றால், சரிதான். அதில் ஒரு காசோலையான 16 00 97 என்ற எண் கொண்ட காசோலையை வைத்துதான் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரிதான். மற்றொரு காசோலையின் எண் தெரியுமா என்றால், தெரியாது. அந்த மற்றொரு காசோலை என்னிடம் தான் உள்ளதா என்றால், அந்த காசோலை கலெக்சனிற்கு செலுத்தியபோது திருப்பப்பட்டுவிட்டது. அந்த காசோலையானது என்னுடைய வங்கி கணக்கில்தான் செலுத்தப்பட்டு,

திருப்பப்ட்டது. அந்த காசோலையின் மதிப்பானது ரூ.50,000/− ஆகும். அந்த காசோலையை நானே பூர்த்தி செய்து தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். அந்த காசோலை என்ன காரணம் குறிப்பிட்டு திருப்பப்பட்டது என்றால், போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டது.

2. வழக்கு காசோலையை வங்கியில் தாக்கல் செய்ததற்கு முன்பாக மற்றொரு காசோலையான 16 00 96 என்ற காசோலையை எப்போது தாக்கல் செய்தேன் என்றால், அந்த காசோலையின் எண் தெரியாது, ஆனால் வழக்கு காசோலையை தாக்கல் செய்வதற்கு 2−3 மாதங்களுக்கு முன்பு மற்றொரு காசோலையை தாக்கல் செய்தேன்.

3. எந்த தேதியில் எதிரிக்கு நான் வழக்கு தொகையை கொடுத்தேன் என்றால், 25.11.2024 ஆகும்.

4. ரூ.50,000/−த்திற்கான மற்றொரு காசோலையை நான் 11.12.2024 அன்று வங்கியில் தாக்கல் செய்தேன் என்று சொன்னால், சரியல்ல. ரூ.50,000/−த்திற்கான மற்றொரு காசோலையும் தாக்கல் செய்து திருப்பப்ட்டது என்றா விபரத்தினை என்னுடைய அறிவிப்பு, புகார் மனு, பிரமாணவாக்குமூலம் ஆகியவற்றில் சொல்லியுள்ளேனா என்றால், சொல்லவில்லை.

5. எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பை நான் படித்துபார்த்து தெரிந்துகொண்டேனா என்றால், தெரிந்துகொண்டேன். எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பிற்கு மறுப்பு தெரிவித்து மீண்டும் அறிவிப்பு அனுப்பினோமா என்றால், இல்லை.

6. ரூ.50,000/−த்திற்கான மற்றொரு காசோலை யாரிடம் உள்ளது என்றால், பட்டுக்கோட்டை Repco வங்கியில் பணிபுரியும் சாந்தி எனும் நபரிடம் உள்ளது.

7. வழக்கு காசோலைக்கு உன்டான செலானை நானதான் பூர்த்தி செய்து தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். வழக்கு காசோலையில் உள்ள பூர்த்தி செய்யப்பட்ட விபரங்களில் உள்ள மையும், அதில் உள்ள கையொப்பத்தில் உள்ள மையும் வேறுபாடாக இருக்கிறது என்று சொன்னால், எதிரி கையொப்பம் இட்டார், இதர விபரங்களை நான் பூர்த்தி செய்தேன்.

8. நான் தாக்கல் செய்துள்ள என்னுடைய அறிவிப்பு, புகார் மனு, பிரமாணவாக்குமூலம் ஆகியவற்றில் உள்ள விபரங்களை நான் படித்துப்பார்த்பின்புதான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால், சரிதான்.

9. என்ன காரணத்திற்காக வழக்கு காசோலை திருப்பப்ட்டது என்றால், போதிய பணம் இல்லை என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டது.

10. ரூ.50,000/-த்திற்கான மற்றொரு காசோலை திருப்பப்பட்ட பின் எதிரியை நேரில் சந்தித்து கேட்டேனா என்றால், நேரில் சந்தித்து கேட்டேன், அதற்கு எதிரி மற்றும் அவரது தாயார் இடத்தை விற்று ரூ.2,00,000/- கடனை அடைத்து தருவதாக என்னிடம் கூறினார்கள். அதற்கு ஏதேனும் ஆதாரமாக Pro Note அல்லது காசோலை ஏதேனும் வாங்கினேனா என்றால், இல்லை.

11. வழக்கு காசோலை திருப்பப்பட்ட பின் எதிரியை நேரில் சந்தித்து கேட்டேனா என்றால், எதிரியை அவர் வேலை செய்யும் பள்ளியிலும், அவரது தாயாரை சீனிவாசன் ஆர்ச் என்ற இடத்தில் சென்று கேட்டேன். அதற்கு பணத்தை ஏற்பாடு செய்து தருவதாக கூறினார்களா என்றால், ஆம், இடத்தை விற்று பணம் தருவதாக கூறினார்கள்.

12. நானும் எனது கணவரும் எதிரியின் பள்ளிக்கு சென்று வட்டி சம்பந்தமாக தகராறு செய்தோம் என்று பட்டுக்கோட்டை நகர காவல்நிலையத்தில் எதிரி புகார் கொடுத்தாரா என்றால், அசலை மட்டும்தான் கேட்டோம், தகராறு செய்யவில்லை, எதிரி புகார் கொடுத்தார்.

13. எதிரியானவரிடம் எனது கணவர் 2021 ஆம் ஆண்டு ரூ.49,000/- கடனாக கொடுத்துவிட்டு மீண்டும் குழுவில் கடன் வாங்கி தருவதாக சொல்லி 160096-160105 ஆகிய எண்கள் கொண்ட கையொப்பம் மட்டும் இட்ட பத்து காசோலைகளை பெற்றுக்கொண்டார் என்று சொன்னால், சரியல்ல, எனது கணவருக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. அந்த பத்து காசோலைகளில் ஒரு காசோலையான 16 00 97 என்ற கையொப்பம் இட்ட காசோலையை நானே பூர்த்தி செய்தேன் என்று சொன்னால், சரிதான், ஆனால், மற்ற காசோலைகளை நான் வாங்கவில்லை.

14. பத்து காசோலைகளுடன் சேர்த்து எனது கணவர் எதிரியிடம் இருந்த ATM Card, Adhar card, passbook ஆகிய ஆவணங்களை வாங்கினார் என்றும், அந்த ATM Card– ஐ பயன்படத்தி நானும் என் கணவரும் மாதந்தோறும் சம்பள பணத்தை எடுத்தோம் என்று சொன்னால், சரியல்ல. எதிரியானவர் ATM Card–ஐ யாரிடமோ ரூ.50,000/–த்திற்காக அடகு வைத்தாக கூறினார்.

15. எதிரி என் மீதும் எனது கணவர் மீதும் கொடுத்த புகாரின் பேரில் போலீஸார்கள் விசாரித்து காவல்நிலையத்தில் என் கணவரை மேற்கூறிய பத்து காசோலைகயையும், ATM Card, Adhar card, passbook ஆகிய ஆவணங்களை எதிரியிடம் கொடுக்கசொல்லி கூறினார்களா என்றால், என் கணவர் மீதுதான் புகார் கொடுக்கப்பட்டது, என் கணவர் பத்து காசேலைகளை தவிர மற்ற ஆவணங்களை கொடுத்துவிட்டார். பத்து காசோலைகளை நீதிமன்றம் மூலம் வழக்கு தொடுத்து பெற்றுக்கொள்ளும்படி என் கணவர் கூறினார் என்று சொன்னால், காவலர்கள் தான் அப்படி சொன்னார்கள் என்று என் கணவர் என்னிடம் கூறினார். அதன்பின்தான் வழக்கு காசோலையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்று சொன்னால், சரிதான். மற்றொரு ரூ.50,000/–த்திற்கான காசோலையையும் காவல் நிலையத்தில் விசாரித்தபின்தான் வங்கியில் தாக்கல் செய்தேன் என்றால், சரிதான்.

16. 2021 ஆம் ஆண்டு என் கணவரிடம் பெற்ற கடனிற்காக கொடுக்கப்பட்ட பத்து காசோலைகளில் ஒரு காசோலையை வைத்து இவ்வழக்கை நான் எதிரி மீது பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல.எதிரியின் கடனானது 2021 –ல் முடிக்கப்பட்டது என்றும், அதன்பின் 2024 வரை எதிரியின் ATM card –ஐ பயன்படுத்தி வட்டி பணத்தை நானும் என் கணவரும் எடுத்தோம் என்று சொன்னால், சரியல்ல.

17. 20.12.2024 அன்று மாண்புமிகு முதலமைச்சர் தனிபுகார் பிரிவு குழுவிற்கு எனது மீதும், எனது கணவர் மீதும் புகார் கொடுக்கப்பட்டு, அதன் அடிப்படையில் பட்டுக்கோட்டை நகர காவல்நிலையத்தில் மேற்கூறிய ஆவணங்களான ATM Card, Adhar card, passbook ஆகியற்றை திருப்பி கொடுக்க சொன்னார்கள் என்று சொன்னால், என் கணவர் மீது மட்டும்தான் எதிரி புகார் கொடுத்தார்.

18. பட்டுக்கோட்டை நகர காவல்நிலையத்திற்கு விசாரணைக்காக என் கணவர் இரண்டு நபர்களை அவருடன் அழைத்து சென்றார் என்றும், அவர்களின் செல்வாக்கை பயன்படுத்திதான் பத்து காசோலைகளை எதிரியிடம் கொடுக்கவிடாமல் செய்தார்கள் என்று சொன்னால், சரியல்ல.

19. எதிரியானவர் என்னிடம் எந்த கடனும் பெறவில்லை என்றும், அதற்கு அவர் எந்த காசோலையும் கொடுக்கவில்லை என்று சொன்னால், சரியல்ல.

20. தற்போது நான் கூறிய விபரங்கள் அனைத்தும் வழக்கின் உண்மை சங்கதிகள் என்று சொன்னால், சரிதான்.

**முடிக்கப்பட்ட நேரம் 12.26 PM**

**(எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், (நடுவர் நிலை)
பட்டுக்கோட்டை.